# வாக்குத்தத்தம்பண்ணினவர்

இந்த வருடத்தின் ஐந்து மாதங்களை கடந்து வந்திருக்கின்றோம். வாக்குரைத்த தேவனாகிய கர்த்தர்தாமே தம் வாக்கிலே உண்மையுள்ளவராக இருந்து நம்மை வழிநடத்தி வருகின்றார். உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் எதிர்பார்த்திருக்கும் சில காரியங்களை தாமாகின்றது என்று சோர்ந்து போய்விடாதிருங்கள். கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்திலே நிலைத்திருங்கள். நித்திய ஜீவனை அடைந்து கொள்வதே விசுவாசிகளின் இலக்கு என்பதை மறந்து போய்விடாதிருங்கள். கடந்த ஐந்து மாதங்களாக பிலிப்பியருக்கு எழுதிய நிரூபத்தை மையமாக வைத்து தியானித்து வருகின்றோம். முதல் இரண்டு அதிகாரங்களிலும், நன்றியறிதலும், வாழ்த்துக்களும், சபையோரின் நிறைவுகள், கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்தே நோக்கம், எச்சரிப்புக்கள், சபையோரின் குறைவுகள், இந்த உலகத்திலே இருந்தாலும், கடந்து சென்றாலும், கிறிஸ்துவோடு வாழ்வதன் மேன்மை, கிறிஸ்துவுக்காக பாடுகளை சகித்தல், மனத்தாழ்மையோடு ஐக்கியமாக இருத்தல், கிறிஸ்துவின் சிந்தையை தரித்திருத்தல், கோணலும் மாறுபாடுமான இருளான உலகிலே ஒளி வீசுதல், ஊழியர்களின் மனப்பான்மை போன்ற தலைப்புக்களின் கீழே முதல் இரண்டு அதிகாரங்களையும் தியானித்தோம், மூன்றாம் அதிகாரத்தின் ஆரம்பத்திலே, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருத்தல், பின்மாற்றக்காரருக்கு எச்சரிக்கையாக இருத்தல், மேன்மை பாராட்டுதல், கிறிஸ்துவை அறியும் அறிவிலே வளருதல், விசுவாசத்திலே நிலைத்திருத்தல் போன்றவற்றைக் குறித்து கடந்த நாட்களிலே தியானித்து வந்தோம். இந்நாட்களிலே, நம்முடைய இலக்கை நோக்கி முன்னேற வேண்டும் என்பதைக் குறித்து தியனம் செய்ய இருக்கின்றோம். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட நாம், கொஞ்சக் காலம், யாத்திரிகளாக இந்த உலத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். வாழ்விலே குறைவுகள், நிறைவுகள் ஏற்பட்டிருக்கின்றது. சோதனைகள் வேதனைகள் இருந்தது. உயர்வுகள் தாழ்வுகள் தவிர்க்க முடியாதவைகள். தவறிப்போகும் நேரங்கள் உண்டு. நாட்கள் கொடியதாக மாறிக் கொண்டிருக்கின்றது. அவைகள் மத்தியிலே சோர்ந்து போகதிருங்கள். கிறிஸ்துவைப் பற்றிம் விசுவாசத்தைவிட்டு தளர்ந்து போகாமல், ஆதியிலே கொண்டிருந்த வைராக்கியத்தை புதுப்பித்தவர்ளாக நிறைவை நோக்கி முன்னேறுங்கள். அழைத்தவர் உண்மையுள்ளவர். முடிவு பரியந்தம் வழிநடத்திச் செல்வார்.

**எபிரெயர் 10:23**

**வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.**

**ஜெபம்:** வாக்குமாறாத தேவனே, கடந்து வந்த பாதைகளிலே நீர் எனக்கு காட்டிய இரக்கத்திற்காக நன்றி, முடிவுபரியந்தம் நான் உம்மிலே நிலைத்திருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பின் பிரதான நோக்கம்...

ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கு எதிராக அயலிலுள்ள நாடு ஒன்று போர் தொடுத்தது. அந்த தேசத்தின் ராஜாவானவன், போரை நடத்தி எதிரிகளை மேற்கொள்ளும்படிக்கு தன்னுடைய தளபதிக்கு கட்டளை கொடுத்திருந்தான். அந்த போர் சில காலமாக நடந்து கொண்டிந்தது. சில நாட்களிலே நடந்த சண்டையிலே தளபதி எதிரிகளை மேற்கொண்டான். தனக்கு உண்டான சிறு வெற்றிகளிலே சந்தோஷப்பட்டான். வீரர்கள் உற்சாகம் அடைந்தார்கள். ஆனால், அவன் அந்த வெற்றியிலே தரித்து நிற்கவில்லை. ஏனெனில் அவர்கள் போரில் இன்னும் வெற்றி அடையவில்லை.வேறுசில நாட்களிலே அவனுடைய படை சில பின்னடைவுகளை சந்தித்தது. சில இழப்புக்கள் ஏற்பட்டது. அதனால், அவன் பின்னிட்டு திரும்பவில்லை. கடந்த நாட்களைக் குறித்து துக்கித்துக் கொண்டிருக்கவில்லை. ராஜா தனக்கு கொடுத்த கட்டளையை நிறைவேற்றும்படி தன் இலக்கிலே மிகவும் கவனமுள்ளவனாக இருந்தான். அதுபோலவே, விசுவாசிகளுடைய வாழ்விலும் அனுதினமும் போராட்டங்கள் உண்டு. அவை ஒன்றின் பின் ஒன்றாக வரலாம். நம் வாழ்விலே நாம் பல தியாகங்களை செய்து பிரயாசப்படுகின்றோம். எனிலும் சில நாட்களிலே பின்னடைவுகள் சந்திக்க நேரிடுகின்றது. மனம் சோர்ந்து போகின்ற நாட்கள் உண்டு. உலகத்திலே எதிர்க்கும் சக்திகள் உண்டு. ஏனெனில், நமக்கு “மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.” என்று தேவ ஊழியராகிய பவுல், எபேசு சபையோருக்கு கூறியிருக்கின்றார். விசுவாசிகள் தங்கள் வாழ்விலே, சில வேளைகளிலே உயர்வுகளை காணும் போது திருப்தியடைந்து அதிலே தரித்து நின்று மேன்மைபாராட்டுகின்றார்கள். பின்னடைவுகளை சந்திக்கும் போது, கடந்தவைகளை நினைத்து துக்கிக்கின்றார்கள். நாம் அப்படியிருக்கலாகாது, “நான் இலக்கயை அடைந்தாயிற்று, அல்லது என் வாழ்விலே நான் முதிர்சியடைந்து முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், பிரதானமான இலக்கை அடையும்வரைக்கும் இயேசு கிறிஸ்துவை நோக்கி, அவருடைய சாயலிலே வளரும்படிக்கு முன்னேறிச் செல்வோமாக.

**பிலிப்பியர் 3:12**

**நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல்,**

**ஜெபம்**: உண்மையாய் கூப்பிடுகின்றவர்களின் ஜெபத்தை கேட்கின்ற தேவனே, நீர் என்னுடைய பரம பிதா என்பதின் கருப்பொருளை உணர்ந்து, அன்போடும் விசுவாசத்தோடும் உம்மண்டை வர உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" என்று ஆண்வராகிய இயேசு கூறியிருக்கின்றார். சில வேளைகளிலே, விசுவாச மார்க்கத்தார் தாங்கள் இன்னும் உலகத்திலே தான் வாழ்க்கின்றோம் என்பதை விசுவாசிகள் மறந்து போய்விடுகின்றார்கள். அதனால் வாழ்க்கையிலே எதிர்பாராத உபத்திரவங்கள் வரும் போது, சோர்ந்து போய்விடுகின்றார்கள். இன்று சில சாரார் உலக ஆசீர்வாதங்களையும், ஐசுவரியத்தையும் குறித்து தவறாக போதித்து, சில விசுவாசிகளின் மனத்தை இந்த உலகத்தின் போக்கிற்கு திருப்பிவிடுகின்றார்கள். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கமனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். இந்த உலகத்தால் உபத்திரவங்கள் ஏற்பட்டாலும், ஆண்டவர் இயேசுவை சார்ந்து வாழ்கின்றவர்கள் அவைகள் மத்தியிலே வெற்றி சிறக்கின்றார்கள். அப்போஸ்தலராகிய பவுல், ரோமருக்கு எழுதிய நிரூபத்தின் 8ம் அதிகாரத்திலே, "உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, ாநச மோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று அறிக்கையிட்டது போல, நாமும் நம்முடைய வாழ்விலே அந்த அறிக்கையிலே உறுதியாய் தரித்திருக்க வேண்டும்.

**ரோமர் 8:37**

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, இந்த உலகத்திலே என் வாழ்விலே உண்டாகும் பின்னடைவுகளை கண்டு, நான் சோர்ந்து போகாமல், உம் வார்த்தையினால் ஜெயங்கொள்ள வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பூரண நிறைவு உண்டாகும்!

ஒரு குறிப்பிட்ட யுத்தமொன்றிலே வெற்றி பெற்று நாடு திரும்பிய தளப திக்கு, அந்த தேசத்தின் சக்கரவத்தியானவர், அதிகாரிகள், பிரமுகர்கள் மற்றும் தேசத்தின் குடிமக்கள் முன்னிலையிலே அவனை கௌரவித் தார். அந்த கொண்டாட்டத்தின் நாட்கள் முடிவடைந்தது. ஆனால், அந்த தளபதியானவன், ராஜாவின் தளபதியாக யுத்தங்களை நடத்த வேண் டிய நாட்கள் இன்னும் நிறைவு பெறவில்லை. அந்த வெற்றியிலேயே அவன் திருப்தியடைந்து, தரித்து நிற் பானாக இருந்தால், அவனுடைய எதிரிகள் அவனுடைய படையை மேற்கொண்டு விடுவார்கள். அவன் தனக்குண்டான வெற்றிகளையும், தான் சந்தித்த தோல்விகளையும் திரும்பி பார்த்து, அவற்றில் அவன் பெற்றுக் கொண்ட அனுபவங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு, முன்னோக்கி பார்க்கின்றவனாக இருந்தான். பிரியமான சகோதர சகோதரிகளிலே, நாம் கிறிஸ்துவின் சாயலை தரித்துக் கொள்ள அழை க்கப்பட்டிருக்கின்றோம். அதன்பொருட்டு, முதலாவதாக, நான் கிறிஸ்து வின் சாயலிலே வளர்ந்து பெருக வேண்டும் என்ற எண்ணம் உண்டாயி ருக்க வேண்டும். இரண்டாவதாக, அந்த எண்ணம் செயற்படுத்தப்படும் படி, கிறிஸ்துவிலிருந்து சிந்தை உண்டாயிருக்க வேண்டும். கிறிஸ்து வுக்குள் பிரயாசப்படுகின்றவர்களாக காணப்பட வேண்டும். உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்க பட வேண்டும். எனினும், ஒரு விசு வாசியாவன்தன்வாழ்நாட்களிலே, முற்றிலும் தேறின பரிபூரண நிலையை அடைய முடியாது. இயேசு கிறிஸ்துவை சந்திக்கும் நாளிலே, மறுரூப மாக்கப்பட்டு அவருடைய பரிபூரண சாயிலிலே விருத்தியடைவோம். அந்த நாள் வரைக்கும், ஒரு ஓட்டப்போட்டிப் பந்தையத்திலே, வெற்றி பெறும்படி எப்பயாக, பின்னிட்டுப் பார்க்காமல், ஒரு வீரன் ஓடுகின் றாபோ, அவ்வண்ணமாகவே, நாம் அழைப்பின் நோக்கத்தை உணரந் தவர்களாக, முன்னோகி செல்ல வேண்டும். ஆதியிலே நன்றாக ஓடி பாதி வழியிலே தூங்குகின்றவர்களாக காணப்படகூடாது. எபப்டியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பிதாவின் சித்தத்தை செய்யும்படி மனத்தாழ்மையும் கீழ்படிவுமுள்ளவராக இருந்தாரோ, அவ்வண்ணமாகவே நாமும் முடிவுவரை காணப்பட வேண்டும். அடைந் தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி மனவிருப்பத்தோடு முன்னோக்கி செல்லு ங்கள்.

**பிலிப்பியர் 3:13**

**ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,**

**ஜெபம்**: பரம பந்தைய பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, எனக்கு எல்லாம் தெரியும் என்ற மனமேட்டிமை எனக்கு உண்டாகத படிக்கு, உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பின் பிரதான நோக்கம்

“அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன் பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன் இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.” என்று பரிசுத்த வேதாகமத்திலே, ரோமருக்கு எழுதிய நிரூபம் 12ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். அதாவது, நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலும் இன்னதென்று உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். பரலோகத்திலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதே நம்முடைய பிரதானமான அழைப்பு. அந்த அழைப்பின் கீழ், கிறிஸ்துவுக்குள் நாம் நிறைவேற்றி வேண்டிய கிரியைகள் உண்டு என்று அறிந்து அவைகளைக் குறித்து தெளிந்த எண்ணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். முற்றிலும் தேறினவனானேன் என்ற எண்ணத்தை களைந்துவிட வேண்டும். ஒருவன் தான் தேவனுக்கு ஊழியம் செய்கின்றேன் என்று கூறி, பிரதானமான அழைப்பைக்குறித்து கவனமாற்றவனாக இருப்பானேயாகில், அவனுடைய ஊழியம் அவனுக்கு விருதாவாக இருக்கும். எனவே, கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேன் என்று உதியாய் அறிந்திருக்க வேண்டும். அதை நான் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் தணிந்து போகக்கூடாது. அதை நான் அடைந்து கொள்வதையே இலக்காக வைத்திருக்க வேண்டும். சத்திய ஆவியானவர் தாமே நமக்கு பெலன் வழிநடத்திச் செல்வார்.

**2 பேதுரு 1:10**

**ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்;**

**ஜெபம்:** பரலோக தேவனே, என்னுடைய பிரயாசங்களைக் குறித்து நானே மெச்சிக் கொள்ளாமல், தாழ்மையுள்ள இருதயத்தைதோடு, பெற்ற பொறுப்பை நிறைவேற்றி முடிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முன்னோக்கிய பயணம்!

**பிலிப்பியர் 3:15**

**ஆகையால், நம்மில் தேறின வர்கள் யாவரும் இந்தச் சிந் தையாயிருக்கக்கடவோம்;**

கிறிஸ்துவின்சுவிசேஷத்திற்காக ரோமாபுரியிலே சிறையிலிருக்கும் தேவ னுடைய ஊழியக்காரனாகிய பவுலுக்கு, குறிப்பாக பிலிப்பி சபையோர் ஆதரவாக இருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் சகோதரர் என்று கருதப்பட்ட சிலர் அவருடைய சிறையிருப்பினிமித்தம் தங்களை அவரைவிட்டு தூர ப்படுத்திக் கொண்டார்கள். சிலர் அவருடைய கட்டுக்களினாலே திடன் கொண்டு, நல்மனதோடு கிறிஸ்து வின் இரட்சிப்பின் சுவிசேஷத்தை அதிகமாக பிரசங்கிக்க துணிந்தா ர்கள். வேறுசிலரோ, பொறாமையி னாலும் விரோதத்தினாலும் அப் படி செய்தார்கள். விசுவாசிகளை வஞ்சிக்கின்றவர்களும், பின்மாற் றக்காரரும் பிலிப்பி சபையோர் மத்தியிலே இருந்தார்கள். சிலர் தாங் கள் விட்டுவந்த உலக மேன்மைகளை உயர்த்துகின்றவர்களாக காணப் பட்டார்கள். இன்னும் சிலர் பிரிவினைகளை உண்டாக்கின்றவர்களாக இருந்தார்கள். இவைகளை குறித்து சபையோருக்கு ஆலோசனைக ளையும், அறிவுரைகளையும் வழங்கினார். ஆனால், தன்னை குறித்த காரியத்திலே, அவர் மிகவும் தெளிவாக இருந்தார். அதவாது, "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்ற அறிக்கையிலே உறுதி யுள்ளவராக இருந்தார். அதே போலவே விசுவாசிகளாகிய எங்கள் மத்த்தியிலும் பற்பல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சிலர் தேவ ஆலோசனைகளை கேட்கலாம், வேறு சிலர் அசட்டை செய் யலாம். எவை எப்படியாக இருந்தாலும், எங்களுடைய அறிக்கையிலே நாம் திடமனதாக இருக்க வேண்டும். தீமோத்தேயு என்னும் இள வயதையுடைய ஊழிக்காரனுக்கு அப்போஸ்தலராகிய பவுல் எழுதும் போது: "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனா ர்கள்". என்று எச்சரிப்பை வழங்கினார். அதைப்போலவே எங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட மேன்மையான நோக்கத்தை மறந்து, மற்றவர்களுடைய காரியங்களைக் குறித்து நாங்கள் அலட்டிக் கொள்ளாமல், கிறிஸ்துவை நோக்கி பார்க்கும் தேறின சிந்தையுள்ளவர்களாக முன்னேறுகின்றவ ர்களாக இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும், அழைப்பின் மேலான நோக்கத்தை மறந்து போகாமல், மேலானவைகளை நாடி முன்னேறுவோமாக.

**ஜெபம்**: பரலோக மேன்மைக்காக என்னை அழைத்த தேவனே, என்னை சூழ்ந்து கொள்ளும் பாரங்களையும் நெருக்கங்களையும் கண்டு தயங் காமல் முன்னேறிச் செல்ல எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தரு ள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவிலே நிலைத்திருக்கும் வாழ்வு

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியாவன், அன்றன்றாடம் உழைத்து தன் குடும்பத் தேவைகளை சந்தித்து வந்தான். அவன் வாழ்விலே பொருளாதா நெருக்கடிகள் இருந்தது. எனினும், அவன் தன் நடைகளிலே கவனமுள்ளவனாக இருந்தான். அதாவது, எந்த ஒரு வேலைக்கும் கூலி பொருந்த முன்பு, ஆராதனைகள், உபவாச கூட்டங்கள், வாரத்திலே நடைபெறும் ஜெபங்களைக் குறித்து எப் போதும் எண்ணமுள்ளவனாக இருந்தான். சடங்காச்சாரப்படியல்ல, மனதார தன் ஆண்டவராகிய இயேசுவை சேவித்து வந்தான். அதனால், சில சமயங்களிலே, அவனுக்கு பொருளாதார நஷ்டம் உண்டாயிருந்தது. ஆனால், தன் ஆத்துமாவிலே சமாதானம் எதனால் உண்டாகின்றதென்பதையும், காலங்கள் கர்த்தருடைய கரதிலே இரு க்கின்றதென்பதையும் அவன் திட்டமாக அறிந்திருந்தான். ஆண்டுகள் கடந்து சென்றதும், அவனுடைய வேலைகளிலே விருத்தி உண்டாயிருந்தது. அவனுடைய வேலைத்திறனை கண்ட ஊரார், வீட்டின் திருத்த வேலைகளை அவனே செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். அந்த வேளையிலும், அவன் தன் ஆத்துமாவின் ஆகாரம் எதனால் உண்டாகின்றதென்பதிலே எந்த மாற்று கருத்தும் இல்லாதவனாக வாழ்ந்து வந்தான். வாடிக்கையாளர்களுடன் முன்பொருந்திய நாட்களுக்கு அமைய, குறிப்பிட்ட நேரத்திற்குள் பொறுப்பெடுத்த வேலைகளை செய்துவிட்டு, கும்பத்தோடு, ஜெயத்திற்கும், வேதப்படிப்புக்கும் கலந்து கொண்டான். உலக முறைமையின்படி அவன் பெரிதாக கல்வி கற்றுருக்கவில்லை. ஆனாலும், கிறிஸ்துவை அறியும் மேன்மையை குறித்தும், அவருடைய வார்த்தையிலே நிலைத்திருப்பதன் அவசியத்தைக் குறித்தும், அதற்கு ஆதாரமாக இருப்பவைகளைக் குறித்தும் மிகவும் கருத்துள்ளவனாக இருந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த சம்பவத்தை மையமாக வைத்து உங்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். ஆரம்ப நாட்களிலே நீங்கள் எப்படியாக ஆண்டவர் இயேசுவை சேவித்து வந்தீர்கள்? ஆதியிலே எப்படிப்பட்ட வைராக்கியம் உள்ளவர்களாக இருந்தீர்கள்? வாழ்விலே உங்களுக்கு உண்டாயிருக்கும் செழிப்புக்கள் அல்லது உயர்வுகள், உங்களை இன்னுமாய் தேவனோடுள்ள உறவிலே உறுதியாய் சேர்த்திருக்கின்றதா அல்லது, ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும் என்று கிறிஸ்துவை அறியும் வாழ்விலே சமரசம் ஏற்பட்டிருக்கின்றதா?

**யோவான் 15:5**

**ஒருவன்என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;**

**ஜெபம்:** பரலோக தேவனே, லௌகீக கவலைகளால் என்னுடைய இருதயம் பாரமடைந்து போகாதபடிக்கு, நெருக்கடியான சூழ்நிலைகளி லும் உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சத்திய வழியிலே நிலைத்திருங்கள்

ஒரு கிராமத்திலே இயங்கி வந்த சிறிய சபையிலே இருந்த ஊழியரும் விசுவாசிகளும் ஜெபத்திலே தரித்திருப்பதிலே உறுதியாய் இருந் தார்கள். தேவைகள் ஏற்படும் போது, அதை தேவனிடத்திலே தெரியப் படுத்தி, காத்திருந்தார்கள். வழிகள் உண்டாகும் போது, அந்த தேவை களை பூர்த்தி செய்தார்கள். சில சமயங்களிலே, பதில் உடனே வந்தது, சில வேளைகளிலே தாமதம் ஏற்பட்டிருந்தது. அந்நாட்களிலே பொறுமை யோடு காத்திருந்தார்கள். ஆண் டுகள் கடந்து சென்றதும், சபை யிலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. எனவே, செயற் திட்டங்களை ஒன்றின்பின் ஒன் றாக ஆரம்பித்தார்கள், அவை கள்நிறைவேறும் போது, தேவன் அதை ஆசீர்வதிக்க வேண்டும் என்று சிறிய ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அதாவது, தங்கள் தேவை களை மட்டுமல்ல, கையிலே பணம் அதிகமாக இருந்ததால், தங்கள் விருப்பங்களையும் செய்ய ஆரம்பித்தார்கள். குழுக்கலாக கூடி கலந்து ரையாடினார்கள். வாக்குவாதங்களும், கருத்து முரண்பாடுகளும் ஏற்ப ட்டது. பெரும்பான்மையானோர் விரும்பியதை செயற்படுத்தினார்கள். ஒரு காலத்திலே ஜெபித்து, பொறுயாக இருந்து பெற்றுக் கொண்டு, தேவைகளை நிறைவேற்றயவர்கள். இப்போது, மனவிருப்பப்டி காரிய ங்களை முன்னெடுத்து, பின்பு தேவ ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கி ன்றவர்களாக மாறிவிட்டார்கள். முன்பு ஜெபமே ஜெமாக இருந்தது. இப்போ, ஜெபம் ஒரு சடங்காச்சாரமாக மாறிவிட்டது. பிரியமான சகோ தர சகோதரிகளே, இப்படிப்பட்ட நிலைமைகள் சபை ஐக்கிங்களிலே மட்டுமல்ல, தனிப்பட்ட வாழ்விலும் உண்டாகி விடுகின்றது. கிறிஸ்து வோடு வாழாத வாழ்க்யையானது சிதறடிக்கப்பட்ட வாழ்க்கையாக காண ப்படும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு வாழ்கின்றவர்கள் அவரு டைய வார்த்தையிலே நிலைத்திருக்கின்றார்கள். இவர்கள் காலத்திற்கு காலம் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்வதில்லை. மறுபடியும் உலகத்தை ஆதயப்படுத்திக் கொள்ள முயற்சிக்காமல், கிறிஸ்துவையே எப்போதும் ஆதாரமாக கொண்டிருக்க வேண்டும். ஆவியிலே ஆரம் பித்து, நன்றாக ஓடி, பாதி வழியிலே உலக போக்கை பின்பற்றி, மாம் சத்திலே முடிக்காகமல், எப்போதும், மெய்யான திராட்சை செடியாகிய இயேசு கிறிஸ்துவிலே ஒட்டப்பட்ட கொடிகளைப் போல காணப்பட வேண்டும்.

**யோவான் 15:6**

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;

**ஜெபம்**: பரலோக தேவனே, ஆவியிலே ஆரம்பித்து மாம்சத்திலே முடிக் காமல், எப்போதும் உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருந்து கனி கொடுக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய்| ஆனி 9 | 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 3:3 – 4

# கிறிஸ்துவின் நாளுக்குரிய ஆயத்தம்

உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு விசுவாசிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இயேசு கிறிஸ்து வழியாக உண்டான இரட்சிப்பை பெற்றவர்களில் சிலர், அதன் பின்பு எப்படியும் வாழலாம் என்ற சிந்தையுள்ளவர்ளாக மாறிவிடுகின்றார்கள். அப்படியல்ல, விசுவாசிகள் தங்கள் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகத்தால் ஈர்க்கப்பட்டு, ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொள்ளாதபடிக்கு எப்போதும் விழிப்புள்ளவர்களாக காணப்பட வேண்டும். அக்காலத்திலிருந்து போல, இன்னும் அதிகமாக இன்றைய நாட்களிலே, விசுவாசிகள் மத்தியிலே அநேக சந்தேகங்களும், கேள்விகளும் உண்டாகிவிடுகின்றது. அந்த கேள்விகளின் கருப்பொருளை ஆராய்ந்து பார்ப்பீர்கள் என்றால், பரிசுத்தத்தை விட்டு விலகிச் செல்வதற்கு வேதத்திலே ஆதாரம் தேடும் கேள்விகளாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, "அது பழைய ஏற்பாடு, இது புதிய ஏற்பாடு, இது புது யுகம், இளம் சந்ததி" என்ற சத்தங்கள் அதிகமாக கேட்கின்றதல்லவா? இவைகளின் தார்பரியம் என்ன? பொதுவாக தங்கள் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும்படிக்கு வழிகளை தேடுகின்றவர்களே இப்படியாக எண்ணங் கொள்கின்றார்கள். கிறிஸ்துவை அறியும் மேன்மைக்காக எதையெல்லாம் விட்டுவிட ஆயத்தமாக இருக்கின்றீர்கள்? கல்வி, வேலை, ஆஸ்தி, அந்தஸ்துக்களை மட்டுமா? மனுஷனை தீட்டுப்படுத்தும் மனதின் யோசனைகளைவிட்டுவிட ஆயத்தமா? "எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்." ஏன்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்கள். கிறிஸ்துவை தங்கள் வாழ்விலே மேன்மைப்படுத்துகின்றவர்கள் தங்கள் மாம்ச இச்சைகளை சிலுவையிலே அறைந்திருப்பதால், அவர்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று ஆயத்தமுள்ளவர்களாக இருக்கும்படிக்கு, கறையற்றவர்களும் துப்பரவானவர்களுமாக இருக்கின்றார்கள். அந்த நாள் அவர்களுக்கு ஒரு கண்ணியைப் போல இருக்காது. அந்த நாள் அவர்களுக்கு ஒரு மகிழ்சியின் நாள். ஆனால், கிறிஸ்துவை தங்கள் வாழ்விலே மேன்மைபடுத்தாமல், இந்த உலகத்தின் போக்கிலே வாழ்பவர்களுக்கு அந்த நாள் மிகவும் பயங்கரமாக இருக்கும்.

**லூக்கா 21:34**

**நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்தப் பூமிக்குரிய அலங்காரத்தை நான் மேன்மைப் படுத்தாமல், என் உள்ளத்திலே பரலோக அலங்காரத்தை தரித்தவனாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவுக்குள் வேறுபிரிந்த வாழ்க்கை

அக்காலத்திலே, தேவனாகிய கர்த்தர்தாமே தம்முடைய சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றி முடிக்கும்படி, தமக்கென்று ஒரு ஜனக்கூட்டத்தை பிரித்தெடுத்தார். அவர்களுக்கு ஆராதனை முறைமையகளையும், இரட்சிப்பையும், வேறு பிரிந்த வாழ்க்கையையும் கற்றுக் கொடுத்தார். அவர்களை பின்னிட்டு சோரம்போகம் பண்ணுவார்கள். உங்களை நெருக்கி, அவர்களுடைய வழிபாடுகள் உங்களுக்கு கண்ணியாக மாறும் என்று முன்னறிவத்திருந்தார். அப்படியாக தேவனாகிய கர்த்தர் கூறியிருந்தும், அவர்கள் அவருடைய வழியை விட்டு விலகி, பெருந்தன்மையோடு, புறஜாதிகளோடு உடன்படிக்கை பண்ணி, தங்கை அழைத்த தேவனாகிய கர்த்தரை விட்வி விலகினாகர்கள். அவரே தங்களுகடைய பெலன், அவர் தங்களோடு இரு ப்பதே மேன்மை என்பதை மறந்து போனார்கள். மற்றவர்களைப்போல தங்கள் மாம்சத்திலே நம்பிக்கை வைத்தார்கள். அதனால் அவர்கள் வாழ்க்கையிலே பெரிதான துன்பங்களையும் இழப்புக்களையும் சந்தித்து, அடிமைத்தனத்திற்குள்ளா னார்கள். இவைகள் வரவிருக்கும் மேன்மையயான காரியங்களுக்கு நிழலாய் இருந்தது. இன்றைய நாட்களிலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் மீட்பை பெற்றவர்கள், வேறு பிரிந்த வாழ்க்கைக்கு என்று அழைக்கப்பட்டிக்கின்றார்கள். கிறிஸ்துவே மகிமையின் நம்பிக்கையாக இவர்களுக்குள் இருக்கின்றார். கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையுமே இவர்களுடைய பெலன். இப்படியாக ஆரம்பித்தவர்கள், பாதி வழியிலே, வாழ்க்கையிலே சௌகரியம் ஏற்படும் போது, மனத்திலே பெருந்தன்மையுடையவர்களாக மாறி, கிறிஸ்துவை அறியாதவர்களுடைய ஐக்கியமாக இருப்பதை நாடுகின்றார்கள். அந்தார இருளில் இருந்து ஆச்சரியமான ஒளிக்கு அழைக்கப்பட்ட இவர்கள், மறுபடியும் இருளின் அதிகாரத்திற்குள் வாழ்பவர்களுடைய நட்பை ஏற்படுத்தி, அவர்களோடு போக்கும் வரத்துமாக இருக்கின்றார்கள். இது தங்கள் பெருந்தன்மை, கிறிஸ்துவினால் உண்டான முதிர்ச்சி, முற்றிலும் தேறின நிலை என்று எண்ணிக் கொள்கின்றார்கள். அப்படியல்ல, இவைகளை ஒரே வார்த்தையில் சுருக்கமாக கூற முடியும். “சமரசம்”. பிரியமானவர்களே, உங்கள் அழைப்பின் மேன்மை மறந்து, இந்த உலக போக்கினால் வஞ்சிக்கப்பட்டு போகாதபடிக்கு எச்சரிக்கயையுள்ள வர்களாக இருங்கள்.

**2 கொரிந்தியர் 6:15**

**கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?**

**ஜெபம்:** வேறு பிரிந்த வாழ்க்கைக்கென்று என்னை அழைத்த தேவனே, இலக்கை நோக்கி ஓடுகின்றதை சிந்தையான கொண்டிருக்கவும், வேறு சிந்தையாக மாறாதபடிக்கும் எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேறின சிந்தையுள்ளவர்கள்

ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகின்ற சிந்தையாயிருக்கக்கடவோம். எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக என்று தேவ ஊழியராகிய பவுல் பிலிப்பிய சபையின் விசுவாசிகளுக்கு கூறியிருக்கின்றார். மேலும் ஒரு விசுவாசியின் வளர்ச்சியைக் குறித்து, எபேசி சபையிலுள்ள விசுவாசிகளுக்கு அவர் விளக்கிக் கூறும்போது, “மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,” நாம் அவருடைய வார்த்தையிலே நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்து வெளிப்படும் நாளிலே அந்த நிறைவை நாம் அடைவோம். அதுவரைக்கும், கிறிஸ்துவுக்குள் வேறு பிரிக்கப்பட்டவர்களாகயிருக்கிற நாம் சீர்பொருந்தும்பொருட்டு, ஊழியங்களையும் ஊழியர்களையும் ஈவாக கொடுத்திருக்கின்றார். எனவே நாம் பேதமையிலும், அறியாமையிலும் தரித்திருக்காமலும், நம்முடைய மாம்ச எண்ணங்களை நிறைவேற்றும் வஞ்சகமான போதனைகளை நாடித் தேடி அலைந்து இழுப்புண்டு போகாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக இவைகளை ஏற்படுத்தியிருக்கின்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, கிறிஸ்து இயேசுவினால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களுடைய போதனைகள் கேளுங்கள். அவர்களுடைய வாழ்க்கை முறைமை பாருங்கள். அவர்களை பின்பற்றுகின்றவர்களாக இருங்கள். இன்று வேறு விதமாய் போதிக்கின்றவர்களின் போதனைகளுக்கு செவி கொடுக்காமலும், இப்படியப்பட்டவர்களின் வழியை பின்பற்றாமலும், இருங்கள். தேறின சிந்தையுள்ளவர்கள், இந்த உலகத்திலே வாழும் வரைக்கும் சத்தியத்தின்படி நடக்க வேண்டும் என்பதை அறிதிருக்கின்றார்கள்.

**எபேசியர் 4:15**

**அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிற தற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், எனக்கு தெளிந்த புத்தியை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# பாவத்திற்கு வழிவகுக்கும் நட்புக்கள்...

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த தகப்பனானவருக்கு ஐந்து குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன், ஊரிலுள்ள வீணர்கள் சிலரோடு நட்புள்ளவனாக இருந்தான். அவ்வப்போது, அவர்களோடு சேர்ந்து, தன் தகப்பனுடைய சொல்லை மீறி நடக்கின்றவனாக இருந்தான். ஒவ்வொரு முறையும் அவனுடைய தகப்பனானவர் அவனுடைய தவறான செய்கை களைக் குறித்து அவனோடு பேசும் போது, கடந்தவைகளை நான் மற ந்து விட்டேன், இனி அப்படி நடக் காதபடிக்கு பார்த்துக் கொள்கின் றேன் என்று கூறிக் கொள்வான். இந்த பேச்சு அவனுடைய வழக்க மாயிற்று. அதவாது, தான் நடத்தி முடித்து தவறுகளை நோக்காமல், எதிர்காலத்தை நோக்கி முன்னேறு கின்றேன் என்று கூறிக் கொள்வான். ஆனால், தவறுகளை நடப்பிக்க உந்துதலாக இருக்கும் நட்புகளை விட்டுவிட அவனுக்கு மனதில்லை. நித்திய வாழ்விகென்று அழைப்பை பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாத துமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்ப டியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். எனவே, நாம் பின்னான வைகளை மறந்து முன்னானவைகளை நாடி பந்தயப்பொருளை பற்றிக் கொள்ளும்படி முன்னோக்கி செல்கின்றோம். பின்னானவைகளை மற ப்பது என்பது, கடந்த நாட்களிலே செய்த பாவங்களை குறித்து பேசா திருப்பது என்பது பொருளல்ல. அவைகளை விட்டுவிடுவதுடன், அவை களை உண்டாக்கும் காரணிகளையும் விட்டு விட வேண்டும். மேலே குறிப்பிட்ட சம்பவத்திலே, அவன், நேற்றைய குற்றங்களை பேசாதிரு ந்தான். ஆனால், அந்த குற்றங்களுக்கு தன்னை உந்தும் வீணரான நண்பர்களின் நட்பை விட்டுவிட மனதில்லாதவனா யிருந்தான். சில சமயங்களிலே, சில விசுவாசிகளும் கூட அப்படியாக இருந்து விடுகி ன்றார்கள். அப்படியான மனநிலையோடு இருக்கின்ற வர்கள் தங்க ளுக்கு தாங்களே நோவுகளை உண்டாக்கி கொள்கின்ற ஏர்கள். காலப் போக்கிலே, அவர்களுடைய சுத்த மனசாட்சியானது சூடுண்டு போவ தால், தாங்கள் செய்வதின் பின்விளைவுகளை பற்றிய உணர்வற்றவ ர்களாக மாறிவிடுகின்றார்கள். எனவே, பாவங்களுக்கு வழிநடத்தும் நட்புக்களையும் உறவுகளையும் குறித்து எச்சரிக்கையுள்ளவர்ளாக இருங்கள்.

**ரோமர் 6:13**

உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

**ஜெபம்:** ஈடு இணையில்லாத மகிமைக்காக என்னை அழைத்த தேவனே, இந்த மகத்துவமுள்ள அழைப்புக்கு தடையாயிருப்பவைகளை கண்டு உணர்ந்து விட்டுவிடும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒரே சிந்தையுள்ளவர்களாய்....

ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள் தேவ ஊழியராகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்திலே குறிப்பிட்டிருப்பதை கடந்த மாதங் களிலே தியானித்தோம். மறுபடியும், 3ம் அதிகாரத்திலே, தேறினவர்கள் யாவரும் பந்தையப் பொருளின் மேல் கண்களை பதிய வைக்கும் சிந்தையுடையவர்களாக இருக்கும்படியாக கூறுகின்றார். சபைகளிலே பிரிவினைகளும், வாக்குவாதங்களும், கலகங்களும் எதனால் உண்டாகின்றது என்பதை சிந்தித்துப் பாருங்கள். எடுத்துக் காட்டாக, ஒரு விசுவாசியானவன், தன் நடை உடை பாவ னையை சற்று இந்த உலகத்திற்கு ஒத்ததாக மாற்றிக் கொள்ளும் போது, அங்கே குழப்பங்களுக்கு ஏது உண்டாகி விடுகின்றது. இன்று அநேகர், இன்றநெற் ஊடகங்களிலே அநேக காரியங்களை பார்கின்றார்கள், கேட்கின்றார்கள். தங்கள் வாழ்க்கை முறையை தேவ வசனத்திற்கு அமையும்படி மாற்றுவதற்கு பதிலாக, தங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்பபடி உபதேசிக்கின்றவர்களைபின்பற்ற ஆரம்பிக்கின்றார்கள். அவற்றை யார், எங்கிருந்து பிரசங்கிக்கின்றார்கள். அவைகள் வேத வார்த்தைகளுக்கு ஒத்திருக்கின்றதா? அந்த உபதேசங்களின் கருப்பொருள் என்ன? அவை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகின்றதா என்பதைை சிந்திப்பதில்லை. தற்போது, தங்களுக்டைய வாழ்க்கை முறைக்கு ஏற்புடையதாக இருப்பதால், அவர்களை தங்கள் போதகர்களாகிக் கொள்கின்றார்கள். அந்த எண்ணங்களை சபைக்குள் கொண்டு வரம்படி முயற்சி செய்யும் போது, அங்கே குழப்பங்களும், பிரிவினைகளும் உண்டாகி விடுகின்றது. பந்தையப் பொருளாகிய நித்திய ஜீவனை பற்றிக் கொள்கின்வர்கள், அதையே தங்கள் வாழ்விலே முதன்மை ப்படுத்திக் கொள்வதினால், ஏனைய எண்ணங்கள் தங்களுக்குள் கிரியை செய்ய இடம் கொடுப்பதில்லை. மேலான இலக்கின்மேல் கண்களை பதிய வைக்கின்றவர்கள், வேதத்தை கருத்தோடு வாசித்து, ஊக்கத்தோடு ஜெபிக்கின்றவர் களாக காணப்படுவார்கள். அதுபோலவே நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாக மேன்மையான இலக்கை நோக்கி முன்னேறுங்கள்..

**பிலிப்பியர் 3:16**

ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக.

**ஜெபம்:** என்றும் மாறாத தேவனே, இந்த உலகத்தின் போக்கின் மேல் கண்களை பதிய வைக்காமல், கிறிஸ்துவை மாதிரியாக கொண்டு, அவரைப் பின்பற்றி செல்லும் படிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உணர்வுள்ள ஜீவியம்

என்னுடைய வாழ்க்கை முறைக்கு ஏற்றவர்கள் யார்? என் சுயம் விரும்பும் காரியங்களுக்கு தடையில்லாமல் அதை ஆதரிக்கின்றவர்கள் யார்? நான் விரும்புவைகளை செய்தாலும் என்னை கிறிஸ்தவன் என்று அழைக்கின்றவர்கள் யார்? அப்படிபட்ட ஐக்கியத்திலேயே நான் இருக்க விரும்புகின்றேன் என்ற பிரகாரமாக வாழ்க்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அதாவது, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷத்தை தரிக்க வேண்டும். இந்த உலகம் தரும் மேன்மைகளை உலகத்தார் போல் அனுபவிக்க வேண்டும். ஆனால், என்னை கிறிஸ்தவனாக கருதிக் கொள்ளவேண்டும் என்பதே இவர்களுடைய எண்ணமாக இருக்கின்றது. உலகத்தாரை போல வாழ்ந்து கொண்டு, கிறிஸ்துவை பின்பற்றுகின்றேன் என்று அழைக்கப்பட வேண்டும் என்று ஆசைப் படுகின்றார்கள். இதை வாசிக்கின்ற நீங்கள் இது ஒரு கற்பனை கதை என்று எண்ணிக் கொள்ளலாம். அப்படியல்ல, இப்படியான அநேக உண்மை சம்பவங்கள், ஆரம்பத்திலிருந்தே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. பரிசுத்த வேதாகமத்திலே, வெளிப்படுத்தல் புத்தகத்திலே, ஆண்டவராகிய இயேசுதாமே சபைகளின் நிலைமைகளைக் குறித்து கூறும் போது, செல்வ செழிப்புடன் இருந்த லவோதிக்கேயா சபையோரை நோக்கி: உன் கிரியைகளை அறிந்திருக்கின்றேன். நீ குளிருமல்ல அனலுமல்ல. நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்னி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன் என்று கூறினார். இவர்கள் சபையிலே இருந்தார்கள். தாங்கள் ஐசுவரியவான்களென்றும், திரவியசம்பன்னனெரென்றும், தங்களுக்கு குறையேதும் இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆண்டவராகிய இயேசுவோ: அவர்கள் நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படதக்கவர்களும், தரித்திரர்களும், குருடர்களும், நிர்வாணிகளுமாயிருக்கின்றீர்கள் என்று அவர்களுடைய ஆவிக்குரிய பரிதாபமான நிலைமையைக் குறித்து எடுத்துரைத்தார். பிரியமானவர்களே, நாங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இடத்தில் தான் நாங்கள் இருப்போம் என்று வாழாமல், ஆண்டவராகிய இயேசுவினால் ஏற்றுக் கொள்ளப்படும்படிக்காய், வேத வார்த்தைகளின்படி வாழும்படியான உங்களை ஒப்புக்கொடுங்கள். சுயம் விரும்பும் இடங்களை நாடித் தேடாமல், நீங்கள் உங்களை கிறிஸ்துவின் சாயலிலே மாற்ற இடங்கொடுங்கள்.

**வெளிப்படுத்தல் 3:15**

நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

**ஜெபம்:** தாயின் கருவினிலே என்னை தெரிந்து கொண்ட தேவனே, வேதனை உண்டாக்கும்வழிகள் என்னித்திலிருந்தால், அவைகளை உணர்த்தி, அவைகளில் இருந்து நான் விடுதலையடையும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| திங்கள் \| ஆனி 15 | 📖 மாலை வாசகம் – வெளிப்படுத்தல் 3:19 |
|---|---|

# நல் வழிகாட்டிகள்

> **பிலிப்பியர் 3:17**
>
> சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.

இந்நாட்களிலே நாம், பிலிப்பியருக்கு எழுதிய நிரூபத்தின் மூன்றாம் அதிகாரத்தை தியானித்து வருகின்றோம். அந்நாட்களிலே, விசுவாசிகள் மத்தியிலே வாழ்ந்து, விசுவாசிகளை வஞ்சிக்ககூடிய வகையில் உப தேசம் பண்ணுகின்றவர்கள் இருந்தார்கள் என்று, பிலிப்பிய நிரூபத்தின் ஆரம்பத்திலிருந்து பார்த்து வருகின் றோம். குறிப்பாக 3ம் அதிகாரத்திலே, உலகத்தால் உண்டான மேன்மைகள் நோக்குகின்றவர்கள், தங்கள் முந்தின வாழ்க்கைக்கு திரும்பினர்கள், இரட் சிப்படைந்து பின்னரும், பழைய மதச் சடங்குகளுக்கு திரும்புகின்றவர்கள், பொல்லாத வழிகளிலே நடக்கின்றவ ர்கள் இருந்தார்கள் என்று பார்த்து வருகின்றோம். இவர்களை குறித்து கூறும் போது, இவர்கள் வேறு சிந்தை யுள்ளவர்கள், வேறு விதமாய் நடக்கின்றவர்கள் என்று கூறியிருக்கின் றார். இப்படியான வேறுவிதமாக நடக்கின்றவர்களை பின்பற்றி நடக் காமல், தேவ ஊழியராகிய பவுல் எப்படியாக கிறிஸ்துவை பின்பற்றி நடந்தாரோ, அவருடைய போதனைகளை கேட்டு, அதை முழுமனதோடு ஏற்றுக் கொண்டு, யாரெல்லாம் நடக்கின்றறார்களோ, அவர்களை மாதி ரியாக கொண்டு, அவர்களைப் போல நடக்கும்படி ஆலோசனை கூறியி ருக்கின்றார். கிறிஸ்துவை அறியும் மேன்மைக்காக தேவ ஊழியராகிய பவுல் தனக்கிருந்த எல்லா உலக மேன்மைகளையும் விட்டுவிட்டு, இல க்கை நோக்கி தொடர்கின்றேன் என்று கூறினார். இவைகளை குறித்து கடந்து இரண்டு கிழமைகளாக தியானித்து வருகின்றோம். எனவே, உங்கள் மனத்திற்கு இதமாக பேசுகின்றவர்களை பின்பற்றாமல், சத்தி யத்தை சுத்தமாக பேசுகின்றவர்களின் வாழ்க்கையை கவனித்து பாரு ங்கள். தேவ ஊழியராகிய பவுல் கூறியதைப் போல இன்னும் ஒருவரும் சம்பூரணர் அல்ல. ஆனால், யார் தேறின சிந்தையுள்ளவர்களாக, தங்க ளுக்குண்டான உலக மேன்மைகளைவிட கிறிஸ்துவை பற்றி வாழ்கி ன்றார்கள் என்று, அவர்களுடைய வாழ்க்கையின் கனிகளினாலே அறி ந்து கொள்ளுங்கள். அவர்களை மாதிரியாக நோக்குங்கள். அவர்கள் உங்களை கண்டிக்கும் போது சோர்ந்து போகாமல், மனக் கசப்படை யாமல், அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். கண்களை இலக்கின்மேல் பதிய வைத்து, முன்னேறிச் செல்லுங்கள். தேவ ஆவியானவர்தாமே உங்களை வழிநடத்திச் செல்வாராக.

**ஜெபம்**: என்னை கண்டித்து உணர்த்தி நடத்தும் தேவனே, வஞ்சிக்கும் வழிகளிலே நடக்கின்றவர்களை நான் பின்பற்றாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வழியிலே நடக்க எனக்கு பிரசாரமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# வஞ்சிக்கின்றவர்களின் வஞ்சகம்

"வேறு விதமாய் நடக்கின்றவர்களை" குறித்து விசுவாசிகள் அறிந்திருக்க வேண்டும். இவர்கள் விசுவாசிகளை வஞ்சிக்கின்றவர்கள். வஞ்சிக்கின்றவர்களை இனங்கண்டு கொள்வது இலகுவான காரியமல்ல. சில வேளைகளிலே, சிலர் விசுவாசத்தைவிட்டு வழிவிலகி போன பின்னரே நாங்கள் வஞ்சிக்கப்பட்டோம் என்று அறிந்து கொள்கின்றார்கள். காரணம் என்ன? வஞ்சிக்கின்றவர்களுடைய தந்திரமா? அல்லது விசுவாசிகள் விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்காமல் அசதியாக இருப்பதா? முதலாவதாக, தேவ ஊழியராகிய பவுல், வஞ்சிக்கப்படுதலைக் குறித்து கொரிந்தி பட்டணத்திலுள்ள சபையோருக்கு எழுதும் போது, "ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்." என்று கூறியிருக்கின்றார். ஏனெனில், வஞ்சிக்கின்றவர்கள், உங்களுக்கு தீமை செய்கின்றவர்களாக தங்களை காட்டிக் கொள்ளாமல், உங்களுக்கு நன்மை செய்கின்றவர்ளாக காண்பித்துக் கொள்வார்கள். சில வேளைகளிலே, மிகவும் சாந்தமாக உங்களோடு பேசுவார்கள். நீங்கள் தவறும் போது, அபாயம் உண்டு என்று எச்சிப்பை வழங்காமல், மிகவும் அன்பாக உங்களுடன் நடந்து கொள்வார்கள். இவர்களுடை பேச்சினாலேயோ, அவர் நடத்தும் கிரியைகளினாலேயோ அவர்களை அறிந்து கொள்வது மிகவும் கடினம். இவர்கள் கேட்டுக்குப் போகிற விரிவான வாசலை வைத்திருப்பார்கள். அதி விசாலமாக இருப்பதினால், அநேகர் அதின் வழியாக பிரவேசிப்பார்கள். பரிசுத்தத்தில் சமசரசம் செய்வதே அவர்களுடைய வஞ்சனை. பாவிகளை இயேசு நேசிக்கின்றார் என்று எல்லோரையும் அன்போடு அழைத்து கொள்வார்கள். ஆனால், பாவத்தை இயேசு வெறுக்கின்றார். எனவே பாவத்தில் வாழாமல் மனந்திரும்ப வேண்டும் என்று உறதியாக கூற மாட்டார்கள். இவர்களுக்கு ஜனத்தொகை அவசியம். ஏனனெில் இவர்களுடைய தேவன் வயிறு. துங்கள் இலிவான ஆதயத்திற்காக அநேகருடைய ஆத்துமா கெட்டுப்போவதைக் குறித்து அவர்கள் கவலையடைவதில்லை. இவ்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞரென்று தேவ ஊழியராக பவுல் அநேகந்தரம் விசுவாசிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். எனவே வஞ்சிக்கின்றவர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**பிலிப்பியர் 3:18**

**அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன்,**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழும்படியாக என்னை அழைத்த தேவனே, சாத்தானின் தூதரின் வஞ்ச வலைக்குள் நான் சிக்கிக் கொள்ளாதபடிக்கு என் கால்களை கண்ணி விலக்கி என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ‘கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞர்’

கிறிஸ்துவின்சிலுவைக்குபகைஞர் எப்படி இயேசு கிறிஸ்துவினால் உண்டான ஜீவனுள்ள வழியை காண்பிக்க முடியும்? இவர்கள், விசுவாசிகளைகிறிஸ்துவின் உண்மையிலிருந்து விலகச் செய்யும்படி, அதவாது, ஆதி அப்போஸ்தலர்கள் பிரசங்கியாத வேறுறொரு இயேசுவையும், வேறொரு ஆவியையும், வேறுறொரு சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கின்றார்கள். இயேசு கிறிஸ்துவை அல்லாமல் இரட்சகர் இல்லை. வேறொரு வழியை காண்பிப்பவன் அந்திக் கிறிஸ்து. அந்த ஆவி வஞ்சிக்கின்ற ஆவி. இப்படியப்பட்டவர்கள் கூறியும் சுவிசேஷம் அல்ல சுவிசேஷம் அல்ல. வஞ்சிக்கின்றவர்களைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கூறும் போது, “ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.” என்றார். எனவே, வஞ்சிக்கின்றவர்களை அவர்கள் வாழ்வின் கனிகளாலே அவர்களை நீங்கள் இனம் கண்டு கொள்ளலாம். அவர்களுடைய தேவன் அவர்களுடைய வயிறாக இருப்பதால், அவர்களுடைய கண்கள் இந்த உலகத்தின் ஐசுவரியத்தையும் ஆஸ்திகளையும் குறித்ததாக இருக்கும். அவர்கள், கிறஸ்து இயேசுவை அறியாததினால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்திலில் வீற்றிருக்ககும் மேலானவைகளை தேடுவதில்லை. மேலானவைகளைவிட அவர் பூமிக்ககுரியவைகளை குறித்து அதிகமாக பேசி அவைகளிலேயே நாட்டமாயிருப்பார்கள். அவர் முதலாவது தங்கள் தேவைகளை நாடித் தேடுகின்றார்கள. நீங்களோ அப்படியிரால், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள். மிகுதியானவைகளை தேவன் பார்த்துக் கொள்வார்..

**மத்தேயு 6:33**

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.**

**ஜெபம்:** நித்திய ராஜ்யத்திற்காக என்னை வேறு பிரித்த தேவனே, வஞ்சிக்கின்ற ஆவிகளை நான் நிதானித்தறியும்படி எனக்கு உணர்வுள்ள இருயத்தை தந்து உம்முடைய வார்த்தையின் வழியிலே நமத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விழிப்புள்ளவர்களாக இருங்கள்!

வஞ்சிக்கின்றவர்களுடைய தந்திரங்களைப் பற்றி கடந்த இரண்டு நாட்களாக பார்த்தோம். இரண்டாவதாக, விசுவாசிகள் விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்காமல் அசதியாக இருந்து விடுவதால், வஞ்சகர்களின் கண்ணிகளிலே சிக்கிக் கொள்கின்றார்கள். "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது." தேவனுடைய வார்த்தைகளிலே ஒரு விசுவாசியின் கால்களுக்கு தீபமும், செல்லும் பாதைக்கு வெளிச்சமுமாக இருக்கின்றது. ஒருவன் வெளிச்சத் திலே நடக்கும் போது, இருளின் அதிகாரம் அவனைப் பற்றிக் கொள் ளாது. வெளிச்சத்திலே இருளுக்கு இடமில்லை. ஆனால், ஆண்டவராகிய இயேசு தங்கள் இரட்கராக ஏற்றுக் கொண்டவர்கள், தேறின சிந்தையுள்ளவர்களாய் ஒழுங்காய் நடத்து கொள்ள வேண்டும் என்று தேவ ஊழியராகிய பவுல் பிலிப்பி சபையின் விசுவாசிகளுக்கு கூறினார். ஆனால், ஆண்டவர் இயேசுவை இரட்சராக ஏற்றுக் கொண்டவர்கள், சில வேளைகளிலே, தங்கள் சொந்த வாழ்விலே தனிப்பட வேதத்தை வாசித்து தியானிக்க தவறிவிடுகின்றார்கள். மற்றவர்களுடைய போதனைகளிலேயே எப்போது தங்கி வாழ்கின்றார்கள். தாங்கள் தங்கி வாழ்ந்தவர்கள் சறுக்கும் போது, இவர்களும் அவர்ளோடு விழுந்து விடுகின்றார்கள். ஒவ்வொரு விசுவாசியும், ஒரு ஆவிக்குரிய சபையை தெரிந்து கொள்ள வேண்டும். தங்கள் தங்கள் மனவிரும்பத்தின்படியல்ல, வேதத்தை சுத்தமாக பிரசங்கிக்கும் சபையை தெரிந்து ொகள்ள வேண்டும். தங்கள் நட்புக்களை வேதத்தின்படி ஆராய்ந்து அறிந்து ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் வேதத்தை குறித்து பேசும் காரியங்கள், வேதத்திலே குறிப்பிட்டபடி உண்மையாக இருக்கின்றதா என்று அறிந்து கொள்ள வேண்டும். சத்திய ஆவியானவருக்கு இடம் கொடுக்கும் போது, அவர் வேத வார்த்தைகளை புரிந்து கொள்ளும்படி உணர்வுள்ள இருதயத்தையும், பிரகாசமுள்ள மனக்கண்களையும் கொடுக்கின்றார். எனவே, ஒவ்வொரு விசுவாசியும், ஆவிக்குரிய சபை ஐக்கியத்திலே இணைந்து, அங்கு பிரசங்கிக்கப்படும் வார்த்தைகளை கேட்டு கைகொள்ள வேண்டும். அனுதினமும் கருத்தோடு வேதத்தை வாசித்து, ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும். விழிப்புடன் வெற்றி வாழ்க்கை வாழ்வதற்பு இவைகள் இன்றியமையாதவைகள்.

**1 கொரிந்தியர் 16:13**

**விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்முடைய வார்த்தைகளால் அடியேன் எச்சரிக்கப்படும் போது, அதை அசட்மை செய்யாமல், கைகொள்ளும் படி அதனால் உண்டாகும் மிகுந்த பலனை உணர்ந்து கொள்ளும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உண்மையுள்ள ஊழியர்கள்

உத்தம இருயத்தோடு, போதிக்கின்றவர்கள், மனிதர்களை பிரியப்படத்த போதிக்காமல், தேவனுடைய சத்திய வார்த்தைகளை கலப்பில்லாமல் போதிக்கி ன்றார்கள். அந்த சத்திய வார்த்தைகளை பின்பற்றுகின்ற வல் கள் இடறிப் போதில்லை. சத்தியத்தின்படி நடக்கும் போதகர்களுடைய சில தன்மைகளை தேவ ஊழியரா கிய பவுல், தெசலோனிக்கேய சபை யோருக்கு விளக்கி கூறியிருக்கின் றார். "சகோதரரே, நாங்கள் உங்களி டத்தில் பிரவேசித்தது வீணாயிருக்க வில்லையென்று நீங்களே அறிந்திரு க்கிறீர்கள். உங்களுக்குத் தெரிந்திரு க்கிறபடி, முன்னே பிலிப்பிபட்டணத் திலே நாங்கள் பாடுபட்டு நிந்தைய டைந்திருந்தும், வெகு போராட்டத் தோடே தேவனுடைய சுவிசேஷ த்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தோம். எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையி னாலும் உண்டாகவில்லை, அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை. சுவி சேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகி றோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்ச கமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்க ளாய் மாயம் பண்ணவுமில்லை் தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக்கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகி மையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம் பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப் பாற்றுகிறது போல, நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவ னுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம். சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும் உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்." எனவே உண்மையுள்ளவர்கள் யார் என்பதை நீங்கள் நிதானித்து அறியுங்கள்.

**1 தெச 2:10**

**விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி.**

**ஜெபம்**: உம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் என்னை அழைத்த தேவனே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே நடந்து, சத்தியத்தை பற்றிக் கொண்டு, பாத்திரனாய் நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எச்சரிப்புக்களை தள்ளிப்போடாதிருங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாச குடும்பத்தினர் தேவனுடைய வார்த்தையிலே உறுதியாய் கட்டப்பட்டிருந்தார்கள். சபையிலே நடக்கும் ஞாயிறு ஆராதனைகள், உபவாச கூட்டங்கள், ஜெப கூட்டங்கள், விசேஷ ஆராதனைகள் போன்றவற்றில் தவறாமல் கலந்து கொண்டார்கள். அவர்கள் பிள்ளைகளும் அப்படியே ஓய்வு நாள் படாசாலை நிகழ்ச்சிகள், வாலிப கூட்டங்களிலே பங்கு பற்றி வந்தார்கள். வேறு அலுவல்களில் பங்கு பெறுவதற்கு அவர்களுக்கு நேரமில்லாதிருந்தது. அதனால், அநேக பிரச்சனைகளை தாங்கள் தவிர்த்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணராதிருந்தார்கள். பிள்ளைகள் வளர்ந்து திருமண வயதிற்கு வந்தபோது, அந்த ஊரிலுள்ள அநேகர் திருமணத்திற்காகவும் வேலைக்காகவும் வெளிநாட்டிற்கு செல்கின்றார்கள் என்பதை கண்டு கொண்டார்கள். அந்த இடத்திலே அந்தக் குடும்பத்தினருக்கு உண்மையானதும் அவசியமானதுமாக தேவை இருந்தது, ஒரு நாள், அவர்கள் சென்று வந்த சபைக்கு ஒரு மனிதன் வருகை தந்திருந்தான். அவன் தன்னை மிகவும் பக்கியுள்ளவன் போல காண்பித்து, வெளிநாட்டிற்கு தான் மனிதர்களை அனுப்புவதாகவும், விசேஷமாக விசுவாச குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாகவும் கூறியிருந்தான். சபையின் போதகர், இந்த காரியத்தைக் குறித்து எச்சரிப்பு வழங்கியிருந்தார். அப்படியிருந்தும், அந்தக் குடும்பத்தினர், அந்த மனிதனோடு பேச ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு தேவையொன்று இருப்பதை அறிந்த அந்த மனிதனானவன், அவர்களோடு மிகவும் தயவாய் பேசி, மிகவும் குறைந்த பணத்திலே அவர்களுடைய பிள்ளையை வெளிநாட்டிற்கு அனுபதாக வாக்குரைது, குறித்த நாள் வந்த போது, அநேகரிடம் முற்பணத்தை வாங்கி தன்வழியே போய்விட்டான். நாட்கள் கடந்து சென்றதும், அந்த விசுவாச குடும்பத்தினர் தாங்கள் வஞ்சிக்கப்பட்டு போய்விட்மோம் என்று அறிந்து கொண்டார்கள். பிரியமானவர்களே, வஞ்சிக்கின்றவர்கள், உங்களோடு தொடர்புகொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தேடி பொறுமாயாக இருப்பார்கள். எனவே, கர்த்தரின் நாமத்தில் வருகின்றோம் என்று ஊடகங்கள் வழியாக வரும் செய்திகளுக்கு செவி சாய்காதிருங்கள். உங்கள் மத்தியிலே, பொருளாசையில்லாதவர்களாக இருந்து, உங்களை கருத்தோடு விசாரித்து, உங்களுக்கு ஆலோசனை கூறுகின்ற வர்களை மதித்து, அவர்கள் புத்தி மதியைக் கேளுங்கள்.

**மத்தேயு 10:16**

**ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.**

**ஜெபம்:** எனக்கு ஆலோசனை தரும் கர்த்தாவே, என்னை விசாரித்து, உண்மையாய் எனக்கு ஆலோசனை கூறுகின்றவர்களை மதித்து, எச்சரிப்பின் சத்தத்தை ஏற்றுக் கொள்ளும் இருதயத்தை எனக்கு தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வஞ்சிக்கின்றவர்களை விட்டு விலகுங்கள்

“ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்.” என்று கரத்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய பவுல், பிலிப்பி சபையிலுள்ள விசுவாசிகளுக்கு கூறியிருப்பதை பிலிப்பியர் 3ம் அதிகாரம் 18ம் வசனத்திலே வாசிக்கலாம். புறம்பே இருக்கின்றவர்களின் ஒரு சாரார், அடையாளங்களையும், உலக ஞானத்தையும் தேடுகின்றார்கள். இவர்கள் தங்கள் ஆத்துமாவை கெடுத்துக் கொள்ளும்படி, கிறிஸ்துவை எதிர்த்து நிற்கின்றவர்கள் எனவே, சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இவர்கள் தங்களுக்கு தெரியாதவைகளை தூஷித்து, புத்தியில்லாத மிருகங்களைப்போல சுபாவப்படி தங்களுக்கு தெரித்திருக்கின்றவைகளினாலே தங்களை கெடுத்துக் கொள்கின்றார்கள். வேற்றுமையான உபதேசங்களை கொண்டவர்கள்: கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் சுய இலாபத்தை நாடுகின்றவர்கள். மேலும் வேறு விதமாய் சிந்திக்கின்றவர்கள், கிறிஸ்வின் நாமத்தை சொல்லிக் கொண்டு, சத்திய வேதம் பாவம் என்று கூறும் அசுத்தங்களை, வாழ்வின் சட்டமாக்கிக் கொள்கின்றார்கள். தீமையை நன்மை என்று கூறிக் கொண்டு, துணிகரமாக பாவத்தை குறித்து மேன்மை பாராட்டுகின்றவர்கள். “அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சை” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. வஞ்சிக்கின்ற போதனைகளை போதிக்கின்றவர்களுடைய இலக்கு கிறிஸ்து அல்ல. இவர்கள் நித்திய ஜீவனை குறித்து சிந்திப்பதில்லை. இதோ, எல்லாருக்கும் நியாயத் தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லா வற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்

**1 தீமோத்தேயு 6:11**

**நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.**

**ஜெபம்:** பரலோக தேவனே, ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் நான் கைகொள்ளவும், வேற்றுமையான உபதேசங்களை விட்டு விலகவும் தேவ ஞானத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திவ்விய சுபாவத்தின் பங்காளிகள்

இந்த உலகத்தின் போக்கில் வாழும் கல்விமான்கள், இந்த உலகத்தின்படி சிந்திக்கின்றார்கள். பூமிக்கடுத்தவைகளை சிந்தித்து. உலக ஞானத்தை நாடுகின்றார்கள். நாங்களோ, இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டுவதில்லை என்று தேவ ஊழியராகிய பவுல்தாமே கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலே கூறியிருக்கின்றார். சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவை மேன்மை பாராட்டுகின்றவர்கள், இந்த பூமிக்குரியவைகளை தேடாமல், மேலானவைகளை நாடித் தேடுகின்றார்கள். அவர்கள் உலக ஞானத்தையல்ல, தேவ ஞானத்தை வாஞ்சிக்கின்றார்கள். அவர் மேலும் குறிப்பிடுகையில்: தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம் இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிற வர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை. அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவை யில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.” *( 1 கொரி 2:6-10)* இந்த உலக ஞானத்தை கொண்டவர்கள், இந்த உலகத்தின் வேஷத்தை தரித்து, இந்த உலகத்திலுண்டானதும், அற்ப பிரயோஜனமுள்ளதும், அழிந்து போகிறதுமான மேன்மைகளை குறித்து பெருமையடைகின்றார்கள். தேவ ஞானத்தை பெற்றவர்கள், தேறின சிந்யையுடையவர் களாக இருக்கின்றார்கள். ஒருவேளை அவர்கள் இந்த உலகத்திலேமேன்மையானவைகள் என்று கருதப்படுபவைகளை கொண்டிருந்தாலும், இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, உலத்திலுள்ளவைகளைக் குறித்து மேன்மைபாராட்டாமலும், பூமிக்குரியவைகளை சிந்திக்காமல், பரலோகத்திற்குரியவைகளையே தியானமாக கொண்டிருக்கின்றார்கள்.

**2 பேதுரு 1:4**

**இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு**

**ஜெபம்:** தூய ஆவியை எனக்கு அருளின தேவனே, நான் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, பரலோகத்திற்குரியவைகளை பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிரந்தர வதிவிடம்

இரட்சிப்பை பெற்றபின்பு தங்கள் சுய விருப்பப்படி பழைய வாழ்க்கைக்கு திரும்புகின்றவர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், இரட்சிப்படைந்த பின்பு தாங்கள் விட்டு வந்த மதச்சடங்குகளுக்கு திரும்புகின்றவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்பதைப் குறித்து தேவனுடைய ஊழியக்காரனாகிய பவுல், பிலிப்பியர் 3ம் அதிகாரத்தின் ஆரம்பத்தி லே திரும்பம் ஞாபகப்படுத்தியத்தைக் குறித்து நாங்கள் தியானித்து வந்தோம். மேலும், இப்படிப்பட்டவர் கள், பூமிக்குரியவைகளை சிந்தித்து, அவைகளை நாடித் தேடுகின்றார்கள். தங்களுக்கு ஆதயம் உண்டாகும்படி, விசுவாசமார்க்கத்தாரை வஞ்சிக்கும்படி, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார்கள் என்று கூறியிருக்கின்றார். இப்படிப்பட்ட கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே, முதலாவதாக: விசுவாசிகளாகிய நம்முடைய இருதயமானது பரலோகத்திற்குரியவைகளை வாஞ்சிக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நாள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாள். ஆதலால், இரண்டாவதாக: கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்க வேண்டும். இந்த உலகத்தின் போக்கில் வாழாமல், அநேக தியாகங்களை செய்து வருகின்றீர்கள். கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அதிகமாக பிரயாசப்பட்டு வருகின்றீர்கள். அந்த இலக்கை அடையாதபடிக்கு, புறம்பேயிருக்கின்ற அவவிசுவாசிகளோ, அல்லது வெளிவேஷம் தரித்து, உள்ளே இருக்கின்றோம் என்று தங்களை விசுவாசிகள் போல காட்டிக் கொள்ளும் கள்ளப் போதகர்களோ உங்கள் பார்வையை திசைதிருப்பி, உங்கள் கண்களை உலகத்திலே பதிக்க வைப்பதற்கு இடங் கொடாதிருங்கள். ஆரம்பதிலே கொண்ட வைராக்கியத்திலே உறுதியாய் நில்லுங்கள். ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தொடர்ந்து நாடித் தேடுங்கள், அப்படியாக உறுதியாய் தரித்திருப்பவர்களுக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே நித்திய ஜீவனை அளிப்பார்.

**ரோமர் 2:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

**ஜெபம்:** நான் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று என்னை வேறு பிரித்த தேவனே, என்னுடைய கண்களை பரலோக மேன் மையிலே பதியவைத்து ஓட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாடகை வீடு

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த குடியானவன், அதிகமாக பிரயாசப்பட்டு உழைத்து வந்தான். தற்போது வாடகை வீட்டிலே வாழ்ந்து வந்த அவனுக்கு, தன் குடும்பத்தோடு, சொந்த வீட்டிலே வசிக்க வேண்டும் என்று வாஞ்சையாய் இருந்தான். தனக்கு சொந்தமாக ஒரு அளவான வீட்டை கட்ட ஆரம்பித்தான். தன்னுடைய உழைபின் பிரயாசத்தினாலே உண்டாகும் பலனை, வீண் செலவு செய்யாமல், அந்த பணத்தை சொந்த வீட்டை கட்டுவதற்கு முதலீடு செய்து வந்தான். தான் வாழும் வாடகை வீட்டிலே எளிமையாக வாழ்ந்து வந்தான். அவனை கண்ட உற்றார், உறவினர்களில் சிலர், நீ ஏன் இப்படி வாழ்கின்றாய்?கடுமையாக உழைக்கும் நீ, அதன் பலனை அனுபவிக்க வேண்டாமா? பிள்ளைகள் இந்த வயதில் உண்டு குடித்து மகிழ்ந்திருக்காவிட்டால், எந்த வயதில் அதை செய்யப் போகின்றார்கள் என்று கூறிக் கொண்டார்கள். அவனோ, அவர்களுக்கு மறுமொழியாக: நானும் என் குடும்பமும் பட்டினியாக இருக்கவில்லை. பிள்ளைகள், தங்கள் வயதிலே செய்ய வேண்டிய காரியங்களை நிறைவேற்வதற்கான ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டிருக்கின்றது. நாங்கள் வசிக்கும் வீட்டில் முதலீடு செய்வதற்கு அது எங்களுக்கு சொந்தமானதல்ல. சில அசௌகரியங்கள் உண்டு. ஆனால், எங்களுடைய நிரந்தர வீடு கட்டப்பட்டபின்பு, நாங்கள் அங்கே சென்று விடுவோம். இப்போதுள்ள பிரச்சனைகள் ஒன்றும் அங்கே இருக்காது என்று தயவாக கூறினான். கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருக்க அழைப்பை பெற்ற அருமைய சகோதர சகோதரிகளே, நாம் வாழும் இந்த உலகம், நமக்கு ஒரு வாடகை வீடு. இது நிரந்தரமான வாசஸ்தலம் அல்ல. “இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.” 2 பேதுரு 3:7ல் வாசிக்கின்றோம். எனவே, ஞானமுள்ள பிள்ளைகளைப் போல, அநித்தியமானவைகளிலே உங்கள் காலங்களையும், வளங்களையும் முதலீடு செய்யாமல், நித்திய வீட்டிற்குரியவைகளிலே முதலீடு செய்யுங்கள். இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள்போலவும் இருக்கவேண்டும் இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே. *(1 கொரி 7:31)*

**சங்கீதம் 23:6**

**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, அநித்தியமானவைகளிலே என் நாட்களை நான் விரயப்படுத்தாதபடிக்கு, நித்தியத்திற்குரியவைகளை பற்றுக் கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருயதத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிலையான நகரத்தை நோக்கி....

இந்தப் பூமியிலே, தங்களை பக்தர்கள் என்று கூறிக் கொள்கின்றவர்கள், புனித ஸ்தலங்களை நோக்கி யாத்திரை செய்யும்போது, பொதுவாக, அவர்களுடைய நோக்கம் ஒன்றாகவே இருக்கின்றது. அவர்கள் பல்லாயிரம் மைல்களை கடந்து செல்கின்றார்கள். போகும் வழிகளிலே, தங்குமிடங்களிலே இரவிலே தூங்கிவிட்டு, அதிகாலையிலே தங்கள் யாத்திரைரைய மறுபடியும் ஆரம்பிக்கின்றார்கள். போகும் வழியிலோ அல்லது தங்கும் இடங்களிலே நடைபெறும் அசௌகரியங்களை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. தங்களைப் பார்த்து நகைக்கின்றவர்களை பற்றி கவனம் செலுத்துவதில்லை. அநாவசியமற்ற பேச்சு வார்த்தைகளிலோ, வாக்குவாதங்களிலோ நேரயத்தை விரயப்படுத்துவ தில்லை.வேறு எந்த காரியங்களும் தங்கள் கவனத்தை திருப்புவதற்கு இடங் கொடுப்பதில்லை. எந்த வேளையிலும் தங்கள் இலக்கை குறி த்த கவனமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். காரியம் அப்ப டியாக இருந்தால், நித்தியமான, அழிவில்லாத, ராஜ்யத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் நாம், எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சில சமயங்களிலே, பெரிதான தியாகங்களை தங்கள் வாழ்வில் செய்து வரும் விசுவாசிகள், அற்பமான சின்ன காரியத்திற்டகாக தங்கள் பிரதானமான நோக்கத்தை மறந்து போய்விடுகின்றார்கள். ஒருவன் தான் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை, சூதாட்டத்திலே பந்தயம் கட்டி, முழுவதையும் இழந்து போவதைப் போல, தங்கள் கடும் பிரயாச ங்களை யாவையும் பலனற்றுப்போகும்படி செய்து விடுகின்றார்கள். இன்னும் சிலர், வரப்போகின்ற ராஜ்யத்தின் மேன்மையை உணராமல், தற்போது இருக்கும் ராஜ்யத்தின் அழிந்து போகின்ற மேன்மைகளை இறுகப் பற்றிக் கொள்கின்றார்கள். ஒரு யாத்திரியானவன், தான் இரவு தங்கும் விடுதியிலே நிரந்தரமாக தங்க முடிவெடுத்துவிட்டால், அவனுடைய மதியீனத்தைக் குறித்து என்ன கூறிக் கொள்ள முடியும்? பிரிய மான சகோதர சகோதரிகளே, விசுவாசிகளாகிய நாம் வசிக்கும் இந்த பூமியில் உண்டாகும் எந்த மேன்மையும், நான் தாபரிக்கும் நிலையான நகரத்திற்கு நிகரானதல்ல. எனவே, வரப்போகிற நிலையான நகரமாகிய பரலோகத்தை நாடித் தேட வேண்டும். பூமியிலே உங்களுக்குப் பொக்கி ஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். நிலையான குடிப்யிருப்பாகிய பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை.

**எபிரெயர் 13:14**

**நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, இந்த பூமி எனக்கு சொந்தமானதல்ல என்பதை ஒருபோதும் மறவாமல், என் சொந்த தேசமாகிய பரலோகத்தை நாடி, அதன் மேன்மைகளை தேட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நித்திய கனமகிமை உண்டாகும்

இந்த உலகத்தின் போக்கிற்கு தங்களை ஒப்புக் கொடுக்காமல், தேவனுக்கு பிரியமாக நடக்க தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள், எப்பக்கத்திலும் நெருக்கப்படுகின்றார்கள். கலகமடையும் சூழ்நிலைகளுக்குள் தள்ளப்படுகின்றார்கள். துன்பங்களை சகித்துக் கொள்கின்றார்கள். ஆனாலும், அவர்கள் ஒடுங்கிப்போகிறதில்லை, மனமுறிவடைகிறதில்லை, கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை.. நாம் கடந்த கிழமைகளிலே தியானித்ததுபோல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகும்படி தேவ ஊழியராகிய பவுல் கூறியதைப் போல, கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்துதிரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். கர்த்தராகிய இயேசுவை உயிரோடெழுப்பிய பிதாவாகிய தேவன்தாமே, எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம். எனவே நாம் சோர்ந்துபோகாமல், எங்களுடைய விசுவாச அறிகையிலே உறுதியாய் தரித்திருப்போம் எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. இவைகளைக் குறித்து தேவனுடைய ஊழியக்காரனாகிய பவுல், 2 கொரிந்தியர் 4ம் அதிகாரத்திலும், 1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்திலும் விளக்கமாக கூறியிருப்பதை வாசிக்கலாம். இந்த உலகத்திலே வாழும் விசுவாசிகளாகிய நாம், உயிரோடிருக்கும் நாட்களிலே, முற்றிலும் தேறின நிலையை அடைந்து விட முடியாது. ஆனால், நாம் முன்னானவைகளை நாடி ஓடுகின்றோம். உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் மறுரூபம் அடைகின்றது. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்

**2 கொரிந்தியர் 4:7**

**மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் என்பதை உணர்ந்து, நித்திய கனமகிமைக்குரியவைகளை நாடித் தேடும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனோடிருப்பவன் யார்?

ஐசுவரியவான்களாக இருந்த சிலர், இரட்சிப்பை பெற்ற பின்பு, தங்களுக்கு உண்டானவைகளை விட்டுவிட்டு, தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் தரித்திரரானார்கள் என்பதை கேள்விப்பட்டிருப்பீர்கள். அதே வேளையிலே, ஏழைகளாக இருந்த விசுவாசிகளில் சிலர், ஐசுவரியத்தை அடைந்த பின்பு, அதைப் பற்றிக் கொண்டு, விசுவாசத்தைவிட்டு வழிவிப்போனதையும் அறிந்திருப்பீர்கள். இந்தப் பூமியிலே வாழும் நாட்களிலே, பற்பலவிதமான மனிதர்களை, விசுவாசிகள் சந்திக்கின்றார்கள். அநேகவிதமான காரியங்கள் அவர்களை தேடி வருகின்றது. ஒருவேளை பொருளாதார நெருக்கடியினால், வறுமை தேடி வரும் போது, அதை சாபம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால், பொருளாதாரம் வாழ்க்கையிலே பெருகும் போது அதை தேவ ஆசீர்வாதம் என்று கூறிக் கொள்கின்றார்கள். என் பிரியமான சகோதரரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்ளுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணினராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா? என்று யாக்கோபு 2ம் அதிகாரத்திலே வாசிக்கின்றோம். பிசாசானவன் ஆண்டவர் இயேசு சோதிக்கும் போது: பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையில்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களைளும் அவைகிள் மகிமையையும் அவருக்கு காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்கும் தருவேன் என்று சொன்னான். மேலும், தேவனுடைய அழைப்பை பெற்ற நாம், தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறித்திருக்கின்றோம் என்று 1 யோவான் 4ம் அதிகாரத்திலே வாசிக்கின்றாம். இந்த உலகத்திலே வாழும்வரை, வாழ்க்கைக்குரிய தேவைகள் உண்டு. அவைகளை பரமபிதா அறிந்திருக்கின்றார். ஒரு விசுவாசியிடம் செல்வம் இருக்கின்றதோ இல்லையோ என்பதை வைத்து அவன் தேவனோடு இருக்கின்றானா என்பதை அறிந்து கொள்ள முடியாது. ஆனால், ஒருவன் தேவன்மேல் கொண்ட விசுவாசத்திலே உறுதியாய் இருந்து, எப்போதும் அவரை நம்பி வாழ்பவனாகவும், பொளாசையாகிய விக்கிரக ஆராதனையை செய்யாமல், தேவனாகிய கர்த்தரை ஒருவரையே சேவித்து, அவருக்கு பிரியமான ஆராதனை செய்யும் போது, அவன் தேவனோடு இருப்பவனாக காணப்படுவான்.

**1 யோவான் 5:19**

நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் வசதிகளின்மேல் என் கண்களை பதிய வைக்காமல், உம்மை நம்பி, உம்மை பற்றிக் கொண்டு, உம் வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உணர்வுள்ள இருதயம் தேவை!

ஆயத்தமுள்ளவர்களாயிருங்கள்! விழிப்புள்ளவர்களாயிருங்கள்! எச்சரிக்கையுள்ளவர்களாய் இருங்கள்! ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்! காதுள்ளவன் கேட்கக்கடவன்! போன்ற விழிப்புணர்வைத் தரும் வார்த்தைகளை, புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்திகளிலும், அப்போஸ்தல நடபடிகள், நிரூபங்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் திரும்ப திரும்ப கூறியிருப்பதை வாசிக்கலாம். இந்த வார்த்தைகள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருப்பதை நற்செய்திகளிலே காணலாம். பின்பு அவர், பரலோகம் சென்ற பின்பு, யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்ற வேத தத்தின்கடைசிப் புத்தகத்திலே, ஆவியானவர் சபைகளுக்கு சொல்வதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எச்சரிப்பை எல்லா சபையோருக்கும் கூறியிருக்கின்றார். அதே ஆவியானவர்தாமே, ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள் வழியாக, பரிசுத்த வேதாகமத்திலே இருக்கும், அப்போஸ்தல நடபடிகள் என்ற புத்தகத்திலும், பின்பாக எழுதப்பட்ட 21 நிரூபங்களிலும் குறிப்பிட்டிருப்பதை வாசிக்கலாம். இவைகள் தேவனுடைய வார்த்தைகள்! இவைகளை விருதாவாக ஆவியானவர் சபையோருக்கு கூறவில்லை. ஆனால், அன்றும் இன்றும், விசுவாசிகளில் சிலர், தேவ வார்த்தைகளைக் குறித்து அசட்டையாகவும், அஜாக்கிரதையாகவும் இருந்து விடுகின்றார்கள். வேறு சிலர், தேவனுடைய எச்சரிப்பானது சபை வழியாக வரும் போது, அதை அற்பாக எண்ணி அவ்விடத்தைவிட்டு அகன்று போய்விடுகின்றார்கள். சத்தியத்தின் வழியிலே நடக்க போதிக்கும் ஆவியானவர், விசுவாசிகளோடு இருந்து, தேவ வார்த்தைகள் சபை ஊழியர்கள் வழியாக பேசப்படும் போது, சுத்த மனசாட்சியை தந்து, பரிசுத்த குலைச்சலான வழிகளை உணர்த்துகின்றார். ஆனால், சிலரோ, ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு இடங்கொடாமல், மாற்று வழிகளை தேடுகின்றார்கள். தங்களுடைய நிரந்திரமான குடியிருப்பு பரலோகம் என்பதை மறந்து அற்பமான சரீரம் வாஞ்சிக்கும் மாம்ச எண்ணங்களுக்கு இடங்கொடுகின்றார்கள். இவர்கள் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருப்பதில்லை. அப்படியானால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது இவர்களுடைய நிலைமை என்னவாக முடியும்? சிந்தியுங்கள், உங்கள் சொந்த வழிகளை ஆராய்ந்து பார்த்து கர்த்தரிடத்தில் திரும்புங்கள்.

**எபேசியர் 5:16**

**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: நித்திய குடியிருப்புக்கு என்னை அழைத்த தேவனே, கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர நான் எப்போதும் எதிர்பார்த்திருக்கும் உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம்மைக்குறித்த பிரதான சித்தம்!

பரம அழைப்பின் பந்தையப் பொருளை நோக்கி செல்லும் பிரியமான சகோதர சகோதரிகளே. நம்முடைய குடியிருப்பு இந்த பூமிக்குரியதல்ல என்பதைக் குறித்து எச்சரிக்கையள்ளவர்களாக இருங்கள். தேவ ஊழியராகிய பவுல் எபேசு சபையோருக்கு எழுதும் போது, தேவ பிள்ளைகளாகிய பரிசுத்தவான்களுக்கு எச்சரிப்பை கூறியிருக்கின்றார், எபேசியர் 5ம் அதிகாரத்திலே அவர் கூறும்போது: மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே என்றார். இந்த எச்சரிப்பை குறித்து அஜாக்கிரதையாக இருப்பவர்களின் நிலைமை என்ன? 1. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும், 2. ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட செய்கைளை ஆதரித்து, தேவன் அன்புள்ளவர் என்று அவருடைய பரிசுத்தத்தை அசட்டை செய்கின்றவர்களுடன பங்காளிகளாகாதிருங்கள் என்று கூறியிருக்கின்றார். எனவே விசுவாசிகளாகிய நாம் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர் கூறுகையில்: முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். மேலே கூறப்பட்ட எச்சரிப்புக்களை குறித்து தியானியுங்கள். இலக்கை நோக்கி முன்னேற தடையானவைகளை விட்டுவிட்டு, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும் நாளை எதிர்பார்த்து காத்திருங்கள்.

**எபேசியர் 5:17**

**ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.**

**ஜெபம்:** பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக என்னை அழைத்த தேவனே, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு காத்துக் கொள்ளும்படிக்கு உம்முடைய வார்த்தையின் வழியிலே வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பொறுமையோடு காத்திருங்கள்

வேறுவிதமாக சிந்தித்து, வீண் வார்த்தைகளை பேசுகின்றவர்கள், அன்பு என்ற போர்வையிலே, தேவனுடைய பரிசுத்தத்தை அசட்டை பண்ணு கின்றார்கள். தங்கள் ஐக்கியங்களை பெருக்கும்படி, அசுத்தங்களை துணி கரமாக நடப்பிக்கிறவர்களை கடிந்து கொள்வதில்லை. எனவே, விசுவா சிகளின் கூட்டத்திலே ஒரு சாரார், ஆயத்தமற்றவர்களாகவே காண ப்படுகின்றார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே, மணவாளன் வர எதிர்பார்த்து, காத்துக் கொண்டிருந்த 10 கன்னிகைகளைப் குறித்து உவமையை கூறும் போது. அவர்க ளில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமா யிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொ ண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை. புத்தி யுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வரத் தாமதித்த போது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட் டார் கள். அதவாது, அந்த 10 கன்னிகைகளும் விசுவாசிகள். தங்களுடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது, என்று அறிந்தவர்கள். அங்கிரு ந்து தங்கள் மணவாளனாகிய, கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்கள். பத்து பேரும் களைப்படைந்து தூங்கிவிட்டார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். ஆனால், அவர்களில் 5 பேர், தங்கள் மணவாளன் இயேசுகிறிஸ்துவை சந்திக்கும்படி தங்கள் வாழ்க்கையிலே எப்போதும் ஆயத்தமுள்ளவர்க ளாக இருந்தார்கள். மற்ற 5 பேர் ஆயத்தமற்றவர்களாக காணப்பட் டார்கள். இன்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்ட அனைவரும். ஒரே சத்திய ஆவியை பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு பரிசுத்த வேதா கமம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் அந்த வேதத்தை தினமும் வாசித்து தியானிக்க வழி உண்டு. அவைகளை கைகொள்ள சத்திய ஆவியாவர் உதவி செய்கின்றார். அனுதினமும் ஊக்கத்தோடு ஜெபிக்க முடியும். அதற்கு எந்த தடையும் இல்லை. ஆனால், சிலர் இவைகளை அசட்டை செய்தால், அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க முடி யாது. நீங்களோ, அவர் வரத்தாமதித்தாலும், சோர்ந்து போகாமல், இல க்கை நோக்கி தொடருங்கள். பொறுமையோடு காத்திருங்கள்.

**மத்தேயு 25:13**

**மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகை யையாவது நீங்கள் அறி யாதிருக்கிறபடியால் விழி த்திருங்கள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வர தாமதி க்கின்றார் என்று நான் சோர்ந்து பின்னிட்டுபோய்விடாதபடிக்கு, எப் போதும் விழிப்புள்ளவனாக காணப்படும்படிக்கு என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.